Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 127 /2023

# Deposition of P.W.5

| | | |
|---|---|---|
| Name | : | லெட்சுமி |
| Husband’s Name | : | தெட்சிணாமூர்த்தி |
| Village | : | வடவாளம் |
| Religion | : | இந்து |
| Age | : | **43 /2024** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 13.08.2024**
(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

<u>முதல்விசாரணை</u>

நான் தற்போது வடவாளம் கிராமத்தில் வசித்து சம்மட்டிவிடுதி **4** ரோட்டில் ஜவுளிக்கடையுடன் கூடிய டைலர்கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.**4** ரவி **(**எ**)** ரவிகுமார் என் கடையிலிருந்து **1** கடை தள்ளி டீக்கடையுடன் கூடிய டிப்பன் கடை வைத்துள்ளார். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள **2** வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கடந்த **2023** ஆம் வருடம் மே மாதம் ஒருநாள் தேதி ஞாபகம் இல்லை. நான் மாலை சுமார் **4.30** மணியளவில் கடையில் இருந்தபோது சம்மட்டிவிடுதி போலிசார் வந்து அரவிந்த் என்பவரை வெட்டியது சம்பந்தமாக விசாரித்து பார்வையிட்டு படம் வரைந்து அருகில் உள்ள இடங்களை குறித்து கொண்டு எழுதினார்கள். பார்வை மகஜரில் ஆவணத்தில் நானும், என் கடைக்கும் ரவி கடைக்கும் நடுவில் உள்ள நகை அடகு கடையில் வேலைபார்க்கும் அசோக் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்ட பார்வை மகஜர் ஆவணம் அ.சா.ஆ.**2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

<u>ம.வி.இல்லை</u>